# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தண்டனைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்
அவர்களால் 2024, மாச்சு மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *244 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) (*19* ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் *363* ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை ஆண் பாதிப்புற்றவர்களுக்கும் பெண் பாதிப்புற்றவர்களுக்கும் நீடிப்பதற்கு ஏற்பாடு களைச் செய்வதற்குமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் *364* ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயன் -

(அ) இருபத்து இரண்டு வயதிற்குக் கீழான தவறாளருக்கும் பதினான்கு வயதினதான அல்லது அதற்கு மேற்பட்ட வயதினதான ஆனால் பதினாறு வயதிற்குக் கீழான பாதிப்புற்றவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பொன்று இருந்திருக்கின்றவிடத்தும் பாலியல் ரீதியிலான உட்செலுத்துகை பாதிப்புற்றவரின் சம்மதத்துடன் புரியப்பட்டுள்ளவிடத்தும் பணிப்பாணை முறையான குறைந்தபட்ச தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்கு நீதிமன்றத்தை இயலச்செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வ தற்குமாகும்; அத்துடன்

(ஆ) இருபத்து இரண்டு வயதிற்குக்கீழான தவறாளருக்கும் பதினான்கு வயதினதான அல்லது அதற்கு மேற்பட்ட வயதினதான ஆனால் பதினாறு வயதிற்குக் கீழான பாதிப்புற்றவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பொன்று இருந்திருக்கின்றவிடத்தும் பாலியல்ரீதியிலான உட்செலுத்துகை பாதிப்புற்றவரின் சம்மதத்துடன் புரியப் பட்டுள்ளது என எண்பிப்பதற்கான சான்றெதுவும் இல்லாதவிடத்தும் குறைவான பணிப்பாணை முறையான குறைந்தபட்ச தண்டனைத்தீர்ப்பை விதிப்பதற்கு நீதிமன்றத்தை இயலச்செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.

**தண்டனைச் சட்டக்கோவை**
**(திருத்தம்)**

ச.வ.- ஒ. 10/2021

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 363 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 19 ஆம் அத்தியாயத்தின் 363 ஆம் பிரிவை திருத்துதல்

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் -

(அ) ''ஆண் ஒருவர் பின்வரும் விவரணங்களுள் எதன்கீழும் அடங்கும் சந்தர்ப்பங்களின்கீழ் பெண்ணொருவருடன் பாலுறவு கொண்டால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(இப்பிரிவில், ''தவறாளர்'' எனக்குறிப்பீடுசெய்யப்படும்) ஆள் ஒருவர் பின்வரும் விவரணங்களுள் எதன்கீழும் அடங்கும் சந்தர்ப்பங்களின்கீழ் (இப்பிரிவில் ''பாதிப்புற்றவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வேறோராள் மீது பாலியல்ரீதியிலான உட்செலுத்துகைச் செயல் ஒன்றைப் புரிந்தால்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில், ‘‘அவளது சம்மதமில்லாமல் அத்தகைய பெண் அவரது மனைவியாகி இருக்குமிடத்தும் கூட;’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘தவறாளரின் மனைவியாக பாதிப்புற்றவர் இருக்குமிடத்தும்கூட அவள் அவ்வாளிடமிருந்து நீதிமுறையாகப் பிரிந்திருக்கின்றவிடத்து பாதிப்புற்றவரின் சம்மதமில்லாமல்;’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (ஆ) என்னும் பந்தியில், ‘‘அவள் சட்ட முறையாக அல்லது சட்டமுறையற்ற விதத்தில் தடுத்து வைத்திருக்கப்படும் போது அவளது சம்மதத்துடன் அல்லது வலோத்காரத்தை அல்லது மிரட்டலை உபயோகித்து அல்லது தடுத்து வைக்கப்படுதல் என்ற பயமுறுத்தல் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்ற பயத்திற்கு அவளை உட்படுத்துவதன் மூலம் அவளின் சம்மதம் பெறப்பட்டிருக்கும் போது;’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘பாதிப்புற்றவர் சட்டமுறையாக அல்லது சட்டமுறையற்ற விதத்தில் தடுத்துவைத்திருக்கப்படும் போது பாதிப்புற்றவரின் சம்மதத்துடன் அல்லது வலோத்காரத்தை அல்லது மிரட்டலை உபயோகித்து அல்லது தடுத்து வைக்கப்படுதல் என்ற பயமுறுத்தல் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்ற பயத்திற்கு பாதிப்புற்றவரை உட்படுத்துவதன் மூலம் அச்சம்மதமானது பெறப்பட்டிருக்கும் போது;’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அதன் (இ) என்னும் பந்தியில், ‘‘அவளது சம்மதத்துடன், அவளது சம்மதமானது அவள் சித்தசுவாதீனம் அற்றவளாக இருக்கின்ற

நேரத்தில் அல்லது அந்த ஆளினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் அவளுக்குக் கொடுக்கப்பட்ட மதுசாரத்தின் மூலம் அல்லது மருந்துகளின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட மதுபோதை நிலையில் அவள் இருக்கும்போது அவளால் கொடுக்கப்பட்டிருந்தால்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பாதிப்புற்றவரின் சம்மதத்துடன், பாதிப்புற்றவரின் சம்மதமானது பாதிப்புற்றவர் சித்தசுவாதீனம் அற்றவராக இருந்த நேரத்தில் அல்லது தவறாளரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் பாதிப்புற்றவருக்குக் கொடுக்கப்பட்ட மதுசாரத்தின் மூலம் அல்லது மருந்துகளின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட மதுபோதை நிலையில் பாதிப்புற்றவர் இருந்தபோது பெறப்பட்டிருந்தால்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(உ) அதன் (ஈ) என்னும் பந்தியில், ''அவளது சம்மதத்துடன், ஆணுக்கு அவர் அவளின் கணவனல்ல என்று தெரிந்துகொண்டும்'' என்னும் சொற்களுக்குப்பதிலாக, ''பாதிப்புற்ற பெண் ஒருவரின் விடயத்தில், அவளது சம்மதத்துடன், தவறாளருக்கு அவர் அவளின் கணவனல்ல என்று தெரிந்துகொண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஊ) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

''(உ) பாதிப்புற்றவர் பதினாறு வயதிற்குக் குறைந்தவராக இருந்தால், அவரது சம்மதத்துடன் அல்லது சம்மதம் இல்லாமல்.'';

(3) அம்மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவுக்கான விளக்கத்தை நீக்கிவிடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(2) இப்பிரிவில், “பாலியல் ரீதியிலான உட்செலுத்துகை” என்பது, தவறாளரின் பிறப்புறுப் புக்களின் மூலம் பாதிப்புற்றவரின் பிறப்புறுப் புக்களினுள், குதத்தினுள் அல்லது வாயினுள் அல்லது அவற்றிற்கு அப்பால் எத்தகையதுமான ஏதேனும் அளவுக்கு உட்செலுத்துகையை விளைவிக்கின்ற ஏதேனும் செயல் எனப் பொருள்படும்.

*விளக்கம் -*

பாலியல் ரீதியிலான உட்செலுத்துகையானது சம்மதம் இல்லாமல் இடம்பெற்றது என்பதை எண்பிப்பதற்கு உடலில் ஏற்பட்ட வெளிக்காயங் கள் போன்ற எதிர்ப்புக்கான சான்று அவசிய மானதல்ல.”.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 364 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 364 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

“கற்பழிப்புக் கான தண்டனை

364.(1) (இப்பிரிவில் ‘‘பாதிப்புற்றவர்’’ எனக்குறிப்பீடு செய்யப்படும்) வேறொரு ஆளின் மீது கற்பழிப்பைப் புரிகின்ற (இப்பிரிவில், “தவறாளர்” எனக்குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் ஆள், (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட விடயங்களில் தவிர, ஏழு ஆண்டுக ளுக்கு குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு

மேற்படாததுமானதொரு காலத்துக்கு கடூழிய மறியற்றண்டனையினாலும் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன், மேலும் பாதிப்புற்றவருக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகையினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்.

(2) (அ) ஒரு பகிரங்க அலுவலராக அல்லது ஓர் அதிகார நிலையிலுள்ள ஓர் ஆளாக அத்தகைய அலுவலக நிலையைச் சாதகமாக பயன்படுத்தி தவறாளர் ஒருவரின் அலுவலகக் கட்டுக்காப்பிலுள்ள பாதிப்புற்றவர் ஒருவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற அல்லது தவறாகத் தடுத்துவைத்து அத்தகைய பாதிப்புற்றவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற;

(ஆ) ஒரு விளக்கமறியல் வீட்டின் அல்லது சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வேறு கட்டுக்காப்பு இடங்களின் அல்லது பெண்கள் அல்லது பிள்ளைகள் நிறுவனம் ஒன்றின் முகாமையிலிருந்து அல்லது பணியாட்டொகுதியிலிருந்து, தவறாளர் ஒருவரின் நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி அத்தகைய விளக்கமறியல் வீட்டில், கட்டுக்காப்பு இடத்தில் அல்லது நிறுவனத்தில் எவரேனும் உடன்வசிப்பவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற;

(இ) ஒரு வைத்தியசாலையின் முகாமையிலிருந்து அல்லது பணியாட்டொகுதியிலிருந்து, தவறாளர் ஒருவரின்

நிலைமையைச் சாதகமாகப் பயன் படுத்தி அவ் வைத்தியசாலையிலுள்ள பாதிப்புற்றவர் ஒருவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற;

(ஈ) பாதிப்புற்ற ஒரு பெண் கர்ப்பமாக விருக்கிறாள் என அறிந்து கொண்டு அவள் மீது கற்பழிப்புப் புரிகின்ற;

(உ) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஒரு பாதிப்புற்றவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற;

(ஊ) உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராகவுள்ள ஒரு பாதிப் புற்றவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற; அல்லது

(எ) கூட்டமாகக் கற்பழிப்புப் புரிகின்ற,

அத்தகைய தவறாளர், பத்து வருடங்களுக்குக் குறையாததும் இருபது வருடங்களை விஞ்சாதது மானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண் டனையினாலும் குற்றப் பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக, பாதிப்புற்றவருக்கு விளைவிக் கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகையினதான நட்டஈட்டை அத்தகைய பாதிப்புற்றவருக்கு செலுத்துமாறு கட்டளையிடப்படுதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், 363 ஆம் பிரிவின் கீழான தவறொன்று புரியப்படும் நேரத்தில் இருபத்திரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட தவறாளர் ஒருவரினால், பதினான்கு வயதினதான அல்லது

பதினான்கு வயதிற்கு மேற்பட்ட ஆனால் பதினாறு வயதுக்குக் கீழான பாதிப்புற்றவர் ஒருவர் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்படுகின்றவிடத்து, -

(அ) பாலியல்ரீதியிலான உட்செலுத்துகை பாதிப்புற்றவரின் சம்மதத்துடன் புரியப்பட்டிருந்தது என நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் தோன்றுகின்றவிடத்து, நீதிமன்றமானது குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்து ஆண்டுகளுக்கு குறைவான தொரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், நீதிமன்றமானது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கமைய, இப்பந்தியின்கீழ் விதிக்கப் பட்ட மறியற்றண்டனைக் காலத்தை தோதான சந்தர்ப்பங்களில் இடைநிறுத்தலாம்; அல்லது

(ஆ) பாலியல்ரீதியிலான உட்செலுத்துகை பாதிப்புற்றவரின் சம்மதத்துடன் புரியப்பட்டிருந்தது என நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் எண்பிப்பதற்கு போதிய சான்று இல்லாதவிடத்து, நீதிமன்றமானது பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றையும்

குற்றப்பணமொன்றையும் விதித்தல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக, பாதிப்புற்றவருக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகையின தான நட்டஈட்டை அத்தகைய பாதிப் புற்றவருக்குச் செலுத்துமாறு கட்டளை யிடுதலும் வேண்டும்.

*விளக்கம் 1*

*கற்பழிப்புத் தவறு ஆட்களின் கூட்டமொன்றிலுள்ள ஓர் ஆளினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய தவறைப் புரியும் அல்லது புரிய உடந்தையாயி ருக்கும் அத்தகைய கூட்டத்திலுள்ள ஒவ்வோராளும் கூட்டமாகக் கற்பழிப்பு புரிந்துள்ளதாகக் கருதப்படு கின்றது.*

*விளக்கம் 2*

*''பெண்களின் அல்லது பிள்ளைகளின் நிறுவனம்'' என்பது, எவ்விதத்திலும் விவரிக்கப்பட்ட பெண் களை அல்லது பிள்ளைகளை ஏற்றுக்கொண்டு பராமரிப்பதற்கான ஒரு நிறுவனம் என்று பொருள் படும்.*

*விளக்கம் 3*

*''வைத்தியசாலை'' என்பது, வைத்தியசாலையின் எல்லைக்குட்பட்ட பகுதி எனப் பொருள்படும் என்பதுடன் நோயிலிருந்து உடல்தேறும் காலத்தி லுள்ள ஆட்களை அல்லது வைத்திய கவனம் அல்லது புனர்வாழ்வு தேவைப்படும் ஆட்களை ஏற்று சிகிச்சையளிப்பதற்கான ஏதேனும் நிறுவனத் தின் எல்லைப்பகுதியையும் உள்ளடக்கும்.*

*விளக்கம் 4*

*''ஊறுகள்'' என்பது, உளவியல் அல்லது மனக் கிலேசத்தை உள்ளடக்கும்.*

(3) பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பாதிப்புற்ற வர் ஒருவரின் மீது கற்பழிப்புப் புரிகின்ற எவரேனும் தவறாளர், அப்பாதிப்புற்றவர் 364அ என்னும் பிரிவில் வரிசைப்படுத்திக் கூறப்படும் உறவுமுறைகளின் எவையேனும் தன்மைகளில் அந்த தவறாளர் சார்ந்திருக்குமிடத்து, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது பதினைந்து ஆண்டு களுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையாலும் குற்றப்பணத்தாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்துவதற்கு கட்டளையிடப் பட்ட நட்டஈட்டை தவறாளர் ஒருவர் செலுத்து வதற்குத் தவறுகின்றவிடத்து, அத்தகைய தவறாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தவறாளர் மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக்கு மேலதி கமாக, இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கப்படக் கூடியவொரு காலத்துக்கு இருவகையில் ஒரு வகையிலான மேலதிகவொரு மறியற்றண்டனைக் காலத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.